பி.எஸ்.சாமி
ஐ.ஏ.எஸ்.

# சங்க நூல்களில் விந்தைப் பூச்சி

சேகர் பதிப்பகம்



ஓவியம் : கவிஞர் அமுதோன், புதுவை ஏ.எஸ்.வாசன்





தமிழ்ப் பண்பாடு
பி.எஸ்.சாமி
அறிவியல்
கட்டுரைகள்

சேகர் பதிப்பகம்




# சங்க நூல்களில் விந்தைப் பூச்சி





சங்க நூல்களில்

# விந்தைப் பூச்சி

அறிவியல் அறிஞர்

பி. எல். சாமி ஐ.ஏ.எஸ்.

முதற் பதிப்பு 23-12-1981.

உரிமை : ஆசிரியருக்கு

**சேகர் பதிப்பகம்**

புத்தகம் வெளியிடுவோர்—விற்பனையாளர்

66 பெரியார் தெரு
எம் ஜி ஆர் நகர்
சென்னை - 600 078

'திருமுடி இல்லம்'
41 ஆனந்தரங்கப்பர் வீதி
புதுச்சேரி - 1

**விலை ரூ. 5.**

அச்சிட்டோர்
வெற்றி அச்சகம்
11, வேங்கடசாமி தெரு, ஐஸ் அவுஸ், சென்னை-600 005.

நூலாசிரியர்

பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ்.



புதுவை மாவட்ட ஆட்சித் தலைவர்

## ஆசிரியர்தம்
## அரிய நூற் படைப்புகள்

1 சங்க இலக்கியத்தில் செடி, கொடி விளக்கம்
- சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

2 சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
- சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

3 சங்க இலக்கியத்தீல் புள்ளின விளக்கம்
- சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

4 தமிழிலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு
- N. C. B. H.

5 கம்பன் காவியத்தில் உயிரினங்கள்
- கம்பன் கழகம், புதுச்சேரி

சேகர் பதிப்பக வெளியீடுகள்

6 சங்க நூல்களில் மீன்கள்

7 சங்க நூல்களில் மணிகள்

8 Common Names and Myths of The Flora and Fauna in Dravidian and Indo-Aryan Languages

9 இலக்கியத்தில் அறிவியல்

10 சங்க நூல்களில் விந்தைப் பூச்சி

## உள்ளே


| | |
|---|---|
| 9 | முன்னுரை |
| 11 | பதிப்புரை - உள்ளத்தின் வெள்ளம் |
| 17 | விழைவும் நுழைவும் |
| 21 | விந்தைப் பூச்சி |
| 27 | வெட்டுக்கிளி |
| 38 | மலரும் மணியும் |
| 45 | மணிமிடை பவளம் |
| 57 | கடம்ப மலர் |
| 60 | கம்பர் தரும் காட்சி |
| 63 | கருவி நூல்கள் |


## படங்கள்


| | |
|---|---|
| 35 | மான் |
| 42 | யானை |
| 53 | நலுங்கு |

# படைப்பு

புதுச்சேரி

'வரலாற்றுச் சங்க'த்தின் வளர்ச்சிக்குரிய தலைவராகத் திகழ்ந்தவரும்,

கற்றோரால் போற்றப்பெற்றவரும் நல்லுளம் படைத்த செயல் வல்லாளரும் ஆன

புதுவை மண்ணின் புகழ் படைத்த மாமனிதர் திருமுடி ந. சேதுராமன் (செட்டியார்) அவர்கள் மறைந்த இரண்டாம் நினைவு நாளன்று

23-12-1981

அப் பெருமகனார்தம்
நினைவைப் போற்றும் வகையில்

ஆய்வுக் கருவூலமான இந்த அழகிய நூலை அன்புடன் படைக்கின்றோம்.

**பி. எல். சாமி,** ஐ. ஏ. எஸ்.
தலைவர்
வரலாற்றுச் சங்கம், புதுச்சேரி

வெள்ளையாம்பட்டு சுந்தரம்
சென்னை

# முன்னுரை

நான் எழுதியுள்ள இச்சிறு நூல் ஒரு விந்தைப் பூச்சியைப் பற்றியதாகும்; தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவக் காற்றினால் முதல் மழை பெய்தவுடன் திடீரென்று பசும் புற்களில் தோன்றும் அழகிய, கருஞ்சிவப்பான பூச்சியைப் பற்றி சங்க இலக்கியங்களில் காணப்படும் இனிய காட்சிகள் என்னைக் கவர்ந்தன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலவர்கள் 'மூதாய்' எனும் இப்பூச்சியை உவமித்துப் பாடிய அறிவியற் செய்திகள் போற்றத் தக்கன. அதைப்பற்றிய இச்சிறுநூல் அரிய செய்திகளைக் கொண்டுள்ளது. இதனை மிகக் குறுகிய காலத்தில் அழகாக வண்ணப் படங்களுடன் வெளியிட்ட சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

கேரளப் பல்கலைக் கழக மொழியியற்றுறைத் தலைவர் டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் இப்பொழுது தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தகுதிமிக்க துணை வேந்தராய் விளங்குகின்றார். இவர் தமிழ்அறிஞரை இனங் கண்டு அவர்களின் திறமையை, ஆற்றலைப் பயன்படுத்து வதில் வல்லவரும் நல்லவரும் ஆவார்.

1967 இல் வெளிவந்த 'சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்' எனும் எனது முதல்நூலுக்குப் பேராசிரியர் வி.ஐ.சு. அவர்கள் தந்த அறிவார்ந்த பாராட்டு மொழிகள் எனக்கு ஊக்கமும் உரமும் ஊட்டின.

... "செடிநூற் செய்திகளைப் பெருக்குவித்துப் படிப்பவர் களைத் துன்புறுத்தாமல் இனிமையாக ஆசிரியர் தமது கருத்தை விளக்கும் திறன் பாராட்டுக்குரியது.

இந்நூலாசிரியர் தந்துள்ள விளக்கங்களால் செடி கொடி களுக்குச் சங்கப் புலவர்கள் பெய்துள்ள அடைகள் பொருட் செறிவு பெறுகின்றன.

சங்கநூல் மாணவர்கள் சாமியின் நூலால் பெறும் பயன் சிறிதன்று. பழம் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் தேட நினைக்கின்றவர்களுக்கும், உரையாசிரியரின் ஆற்றல்களை அறுதியிட நினைக்கின்றவர்களுக்கும், செடிச் செய்திகளை வரலாற்று முறையில் எழுத நினைக்கின்றவர்களுக்கும் இந் நூலாற் கிடைக்கும் பயன் பெரிது." ...

இவ்வாறு என்னை இனங்கண்டு ஊக்குவித்த தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு நன்றி செலுத்து கிறேன். அது போன்றே தமிழ் அறிஞன் என்று என்னைப் பாராராட்டி ஊக்கமளித்து வரும் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையாரவர்களுக்கும் நன்றியுடையேன்.

நான் எழுதிய நூல்களில் சிறியதான இதில் ஆராயப் பட்டுள்ள இலக்கிய அறிவியற் செய்திகள் மிகப் பெரியன, அரியன என்பதில் ஐயமில்லை. இந்நூலையும் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுமென்று நம்புகின்றேன்.

அன்பன்

பி. எல். சாமி.

## உள்ளத்தின் வெள்ளம்

தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு புதுமையைக் குறிப்பிடும் போது, 'அத்தி பூத்தது போல்' என்று கூறுவது வழக்கம். அதன்படி இந்நூல் வெளி வருகிறது.

நூலா இது? சிறிய ஏடுதான்! ,

ஒரு வரியே உள்ள 'பழமொழி' எத்துணைச் சிறப்பிடம் பெறுகின்றது! அறநெறியாகவும், நீதி மொழியாகவும், வாழ்க்கைச் சித்திரமாகவும், வாழ்க்கைத் தத்துவமாகவும் பழமொழி விளங்குகின்றது அல்லவா!

நமது நீதி நூல்கள்கூட உருவில் சிறியவையே. ஆத்தி சூடியும் கொன்றை வேந்தனும் சிறிய சிறிய நூல்கள்தாம். அவற்றுள் காணும் பாடல்களும் சிறியனவேயாகும்.

அளவு அல்லது உருவம் சிறியதாயினும் அதன் பயன் எத்தகையது என்பதே கவனிக்கத் தக்கது.

அவ்வகையில் ஒரு சில பக்கங்களுடன் ஒரு நூல் வெளிவந்தால் அது கவனிக்கப்பட வேண்டியதே.

நூலின் கனம் பெரிதா, அதன் கருத்து பெரிதா என்பதே ஆராயப்பட வேண்டியது.

நான் கருத்தின் சிறப்பையும் பயனையும் கருதியே பெரும்பாலான நூல்களைப் பதிப்பித்து வருகின்றேன்.

1966இல் எனது மதிப்பிற்குரிய உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் வானொலியில் நேருவைப் பற்றி 15 நிமிடங்கள் பாடிய பாடல்களைக் கேட்டேன். அதன் சிறப்பை நான் உணர்ந்து மகிழ்ந்தேன். தமிழ்க் கவிதைகள் இவ்வாறு உருவாக வேண்டும் என்று மிகவும் விழைந்தேன். அதனால் பிறர்க்கு அதனை உணர்த்த,எடுத்துக் காட்ட வேகமாகச் செயல்பட்டேன்.

16 பக்கங்களில், பக்கத்துக்குப் பக்கம் வண்ணப் படங்களுடன் அச்சிட்டு அழகிய கவிதை நூலாக வெளியிட்டேன்.

அதன் பெயர் : 'கவிதைத் தலைவர் நேரு!'

பின்னர் அறிஞர் பி. எல். சாமியின் ஆங்கில ஆய்வுக் கட்டுரையை 32 பக்கங்கள் கொண்ட சிறந்த பதிப்பொன்றை 1981 டிசம்பர்த் திங்களில் வெளியிட்டேன்.

நூலகத்துறை உடனுக்குடன் வாங்காமல், நிர்வாகக் கடலில் நீந்திக் கொண்டிருக்கும் நிலையில், விற்பனையின்றி முடக்கப்பட்டுள்ள பல நூறாயிரக்கணக்கான நூல்களுடன் Common Names and Myths of the Flora and Fauna in Dravidian and Indo-Aryan Languages என்கிற இச்சிறு நூலும் சேர்ந்து கிடக்கின்றது.

கேரள நாட்டிலுள்ளதுபோல விறுவிறுப்போ, வங்க நாட்டு வேகமோ, மராட்டிய மாநிலத்து வளர்ச்சியோ,

ஏன் ஆந்திரத்து அளவிலோகூட நமது 'தெய்வத் தமிழ்' நூல்கள் 'வளர்ச்சி காண முடியாமல் தத்தளித்துத் தள்ளாடுகின்றன.

நமது நூலகங்கள் நூல்களுக்காகவா? ஆட்களுக்காகவா? என்பதே இனிமேல்தான் வரையறைப் படுத்த வேண்டும்போல் தெரிகிறது. பரபரப்பான நாளிதழ்கள், சூடும் சுவையும் கொண்ட வார இதழ்கள், மற்றும் சில மாத இதழ்கள் ஆகியவற்றைத் தருவதே தம் கடமையென்று சொல்லாமல் சொல்வது போல் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

வரதட்சணை தரமுடியாமல் திருமணம் நடைபெறாமல் தவித்துக் கிடக்கும் ஆயிரமாயிரம் பெண்களைப் போலவே, அரசின் நூலகங்களை நாடிப் போய் மக்கள் படித்துப் பயன் பெற்றிட இயலாமல் பல இலட்சங்கள் மதிப்புடைய தமிழ் நூல்கள் புழுதி படிய, பழுப்பேறிக் கிடக்கின்றன.

இத்தகைய 'வளர்ச்சி'ப் போக்கில், நாங்கள் உணர்ச்சி குன்றாமல், மேலும் மேலும் ஏதாவது நல்ல நூல்கள் தந்தாக வேண்டும் என்று ஆர்வத்தோடு செயல்படுகிறோம். அவ்வகையில் இச்சிறு வெளியீடும் சேர்கிறது.

நூல் சிறியதாயினும் அமைப்பு முறையில் மிகப் பெரியது; விரிவான செலவில் உருவாகியது. அழகும் அமைப்பும் அரிய கருத்துக்குத் துணையாகி யிருக்கிறது.

பெரிய புத்தகங்களைப் புரட்ட மனமற்றோர் - ஆர்வம் காட்டாதோர் இது போன்ற சிறிய நூல்களையாவது படிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

நூலகங்களில் 'பக்க அளவு'த் தடைகள் இருப்பினும், பரிசளிக்கும் திட்டங்களில் 'கனத்துக்கு' மட்டுமே முதலிடம் தரும் பக்குவம் இருந்தாலும் அவற்றை யெல்லாம் கருத்தில் கொள்ளாமல், உயர்ந்த கருத்து, உயர்ந்த முறையில் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும் செயலூக்கமும் இந்நூலை வெளியிடத் துணை நின்றுள்ளன.

தமிழ்ப் புத்தகத் துறைக்கு இவ்வாறு புதிய பழக்கங்கள் வரவேண்டும்; வளர வேண்டும் என்பதே நமது விருப்பம்.

அரசுத் துறைகள் அரவணைக்காத நிலையில் மக்களையே நம்ப வேண்டியுள்ளது. மக்களோ பொழுது போக்கிலும், கால பலன்களிலும், கவர்ச்சிக் கனவுகளிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். பெரும்பாலோர் வளர்ச்சி, ஆக்கம், செயல்திட்டம், முன்னேற்றம் என்பன பற்றி யெல்லாம் கவலைப்படாமல், நுனிப்புல் மேய்வதிலேயே 'அறிவு' பசியைத் தீர்த்துக் கொள்கின்றனர். இந்த அவல நிலையை மாற்றுவது யாரோ? மாறுவது என்றோ?

கற்கக் கசடறக்
கற்பவை கற்றபின்
நிற்க, அதற்குத் தக!

என்னும் திருக்குறள் நம்மைப் பார்த்துத் திகைத்துப் போய் தூர நிற்கிறது.

'விடியும்போது விடியட்டும்' என்று காத்திராமல் நல்லவர்கள் சங்கு ஊதிக்கொண்டே யிருக்கிறார்கள்.

அறிவியல் ஆய்வு நோக்குடன் சங்க இலக்கியங்களில் முழுதும் தோய்ந்து ஆய்ந்து நல்ல பல செய்தி

களைக் கண்டளித்து வரும் புதுவை அறிவியல் அறிஞர், புதுவை மாவட்ட ஆட்சித் தலைவர் பி. எல். சாமி ஐ.ஏ.எஸ். அவர்களின் சுவையுணர்ச்சியின் வெளிப் பாடாக முகிழ்த்த கட்டுரை,

"சங்க நூல்களில் மூதாய்"

எனும் பெயரில் 'செந்தமிழ்ச் செல்வி' 1981 அக்டோபர் இதழில் வெளி வந்தது.

அதன் சிறப்பினை உணர்ந்து மகிழ்ந்த இலக்கிய அன்பர்களின் ஈடுபாடும் ஒத்துழைப்பும் சேர்ந்து இந் நூல் வெளியாகின்றது.

"மூதாய்" என்பது இக்காலத்தில் குழப்பம் தரும் என்பதால் 'விந்தைப் பூச்சி' என்று விளங்குமாறு தலைப்பு தரப்பட்டுள்ளது.

நோக்கம் சிறந்ததுதான்; ஆனாலும் ஊக்கம் தாருங் கள்; அப்பொழுதுதான் ஆக்கம் வளரும்!

தமிழில் அறிவியல் புதுமைகள் மிக வேகமாக வளரத் துணை செய்வோமாக!

இச் சீரிய தொண்டினைத் தொடர்ந்து செய்துவரும் புதுவை அறிவியல் தமிழறிஞரான இந்நூலாசிரியருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியுரியது.

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**
சேகர் பதிப்பகம்
சென்னை

# புகழ்நூல் படைப்போம்

பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்

மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை

திறமான புலமையெனில்
வெளிநாட்டோர் அதைவணக்கஞ்
செய்தல் வேண்டும்!

— மகாகவி பாரதியார்

# விரைவும் நுழைவும்

## விந்தை யுலகம்

உலகம் விந்தையானது. அதிலுள்ள எண்ணற்ற பொருள்களும் விந்தையானவை.

மனிதன் இயற்கையின் அரிய பல விந்தைகளைக் கண்டு வியப்பால் மலைத்து நிற்கின்றான்; ஆராய்ந்து அறியும் அறிஞர்களும் கவிஞர்களும் வியப்பால் திகைத்து நிற்கின்றனர்.

புலப்படாத - புரிந்து கொள்ள முடியாத எண்ணற்ற புதிர்களைக் கொண்ட இவ்வுலகப் பொருள்கள் அனைத்தையும் ஆராய்ந்தறிவது எளிதான செயலா? யாரால் முடியும்?

பல்லாயிரம் ஆண்டுகளாக - மனித இனம் பார்த்து வருகிறது; ஊன்றி ஊன்றிக் கவனித்து வருகிறது. அநுபவத்தால், ஆராய்ச்சிகளால் தொடர்ந்து அறிய முயன்று வருகிறது. அறிவியல் ஆய்வு மிக அதிகமாக நடந்தபடியே உள்ளது.

## தமிழர் அறிவியல்

நம் தமிழ் நாட்டில் முற்காலத்தில் இயற்கை யறிவு மிகுந்திருக்கிறது. ஆராய்ச்சி முறையிலும் அநுபவ நிலையிலும் அக்காலத் தமிழ்மக்கள் வளர்ச்சி நிலையில் இருந்திருக்கிறார்கள். இதனை எண்ணற்ற நிலைகளில் நாம் கண்டுணர முடிகிறது.

நமக்குக் கிடைத்துள்ள பழங்காலத் தடயங்கள் என்பவற்றுள் முதலிடம் பெறுவது நமது இலக்கியங்கள்தாம்.

சுமார் ஈராயிரம் ஆண்டுகட்குப் பின்னர் அறிவியல் அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்துள்ள செய்திகளையும் நம் சங்ககால நூல்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

## உயிரினங்கள்

ஆயிரமாயிரம் விந்தைகள் உள்ளன. உயிரினத்தில் பூச்சியினம் ஒன்று; பூச்சிகள் எண்ணற்றவை; நடப்பன சில; பறப்பன சில; ஊர்வன சில; நீந்துவன சில.

பூச்சிகளின் வண்ணங்கள் காணக் காணத் திகட்டாதவை; எத்தனை ஓவியர்கள் கூடினாலும் சிறு அழகிய பூச்சிகளின் எழிலினைப்போல் புதிதாய் வரைந்து காட்ட இயலாது. சொல்லொணா நல்லழகுள்ள பல்வகை வண்ணக் கலவைகள், வண்ணக் கோலங்கள் பல சின்னஞ்சிறு பூச்சிகளிடம் காண்கின்றோம்.

இங்கே கார்காலத்துத் தோன்றும் செம்மை நிறம் கொண்ட ஒரு சிறு பூச்சியைப் பற்றிய செய்தியை அறிய முற்படுவோம்.

## கவிஞர் நோக்கு

கவிஞர்களின் கற்பனை நோக்கில் இயற்கையும் கட்டுண்டு காட்சி தருகின்றது. ஒன்றை மற்றொன்றைக் காட்டி விளக்கிச் சொல்வது கவி மரபாகும்.

ஒன்றுடன் வேறொன்றை ஒப்பாகப் பொருத்திக் காட்டுவதும் கவிஞர்தம் சிறப்பாகும்.

மற்றவர் மனத்தில் தாங்கள் சொல்வதை நிலை நிறுத்துவதற்கு, கவிஞர்கள் கைக்கொள்ளும் உத்திகள் எண்ணியெண்ணிச் சுவைக்கத் தக்கவையாகும்.

தம்பலப் பூச்சியைக் குறிப்பிடும்போது புலவர் அதன் வண்ணத்தைச் சொல்லி நம் மனத்தில் பதிய வைக்க முற் படுகிறார். அதற்கு மற்றொரு தெரிந்த பொருளை நமக்கு நினைவுபடுத்துகிறார்.

பவளம், மக்கள் கழுத்தில் அணியும் ஒரு பொருள். அதன் நிறம் சிவப்பு. எனவே பவளம் போன்ற சிவந்த நிறமுடைய பூச்சி என்று கூறுகின்றார்.

## ஆய்வதும் அறிவிப்பதும்

இவ்வாறு சங்க நூல்களில் பலப் பல செய்திகள் பாங்குறக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் அறிவியல் தொடர்பான சில செய்திகளை நான் பல்லாண்டுகளாக ஆய்ந்து வருகிறேன்; அறிந்து மகிழும் ஒரு சிலவற்றை மற்றவரோடு பகிர்ந்து மகிழும் ஆர்வத்தில் பல கட்டுரை கள் எழுதியுள்ளேன். அவை நூல்களாகவும் வெளி வந்துள்ளன.

உயிரியலில் எனது நாட்டம் உள்ளது. தாவரங்கள், பறவைகள், மீன்கள் என்பன போன்றவற்றில் இலக்கியப்

புலவர்கள் வைத்துச் சென்றுள்ள அரிய அறிவியல் செய்திகளை நுணுகிப் பார்த்து வியப்பில் மூழ்கிப் பேரின்பம் பெறுகின்றவன் நான்.

இப்பொழுது, 'தம்பலப்பூச்சி' என்றும், 'இந்திர கோபம்' என்றும் கூறப்படுகின்ற மென்மையான ஓர் அரிய பூச்சியைப் பழங்காலத்தார் "மூதாய்" என்று வழங்கியுள்ளனர். மூதாதையர் உரைத்துள்ளவாறு அந்த "மூதாய்"ப் பூச்சியை நாம் இங்கே காண முற்படுவோம்.

## விந்தைப் பூச்சி

சங்க நூல்களில் 'மூதாய்' என்றவோர் அழகிய பூச்சி கூறப்பட்டுள்ளது. இந்தப் பூச்சி பிற்கால இலக்கியத்தில் 'இந்திரகோபம்' என்று கூறப் பட்டுள்ளது.

"தண்பெயல் பொழிந்த பைதிறு காலைக்
குருதி யுருவின் ஒண்செம் மூதாய்
பெருவழி மருங்கில் சிறுபல வரிப்பப்
பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ
வெண்களர் அரிமணல் நன்பல தாஅய்"

அகம் 74

"அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய
அங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்"

அகம் 14

"தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
வெண்புறக் குடைய திரிமருப்பு இரலை
வார்மணல் ஒருசிறைப் பிடவவிழ் கொழுநிழற்
காமர் துணையொடு ஏமுற வதிய
அரக்குநிற உருவின் ஈயல் மூதாய்
பரப்பி யவைபோல் பாஅய்ப் பலவுடன்
நீர்வார் மருங்கின் ஈரணி திகழ"

அகம் 139

"மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்
புலனணி கொண்ட காரெதிர் காலை"

அகம் 304

"இன்குரல் அழிதுளி தலைஇ நன்பல
பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறைச்
செறிமணல் நிவந்த களர்தோன்று இயவில்
குறுமோட்டு மூதாய் குறுகுறு ஓடி
மணிமண்டு பவழம் போலக் காயா
அணிமிகு செம்மல் ஒளிப்பன மறையக்
கார்கவின் கொண்ட காரெதிர் காலை"

அகம் 374

"தலைநாட் கெதிரிய தண்பெயல் எழிலி
அணிமிகு கானத்து அகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டும்
நீவிளை ஆடுக சிறிதே யானே"

நற்றிணை 362

"செழுங்குலைக் காந்தள் கைவிரல் மூப்பவுங்
கொல்லை நெடுவழிக் கோப மூரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்"

சிறுபாணாற்றுப்படை 167 169

''ஈயலின் மூதாய் பரப்ப வினமரீஇக்
கோவல ருதுங் குழலிரங்க—
கோவந் தவழக்கால் செய்தன்று''

நாற்கவிராசநம்பி
சூ. 170, மேற்கோள்.

மேற்காட்டிய பாட்டுகளில் மூதாய் என்ற பூச்சியைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதைக் காண லாம்.

இயற்கையை இருந்தவாறே கூறும் வல்லுநர் களான சங்கப் புலவர்கள், இயற்கையிலேயே மிகமிக அழகான தொரு பூச்சியைப் பற்றிக் கூறி யிருப்பது மிகவும் போற்றத் தக்கதாகும்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் இந்தப் பூச்சியைப் பிடித்து விளையாடிப் பொழுது போக்கியுள்ளேன்.

தமிழ்நாட்டுப் பூச்சிகளில் மிக அழகானவை இரண்டே.

ஒன்று பறக்கும் பட்டாம் பூச்சி; வண்ணத் துப் பூச்சி. 'வண்ணாத்திப் பூச்சி' என்று பேச்சு வழக்கில் கூறுவர். மற்றொன்று மூதாய்.

இந்த மூதாயைப் 'பட்டுப்பூச்சி' என்று பேச்சு வழக்கில் கூறுவர். பொன்வண்டும் அழகிய வண்ணப் பூச்சிதான். இந்த வண்ணப் பூச்சிகளை எல்லாம் பிடித்து நான் விளையாடி யிருக்கிறேன்.

## கடுஞ்செம் மூதாய்

இந்தப் பூச்சி மாரிக்காலத்தில் முதல் மழை பெய்தால் தோன்றுகிறது. இவ்வாறு திடீ ரென்று தோன்றித் திடீரென்று மறைந்துவிடும் இந்த அரிய பூச்சியையும் சங்கப் புலவர்கள் தெரிந்து கூறியுள்ளார்கள்.

இந்தப் பூச்சி கடுஞ்சிவப்பான அழகிய நிற முடையதாகும். அதனால்தான் 'கடுஞ்செம் மூதாய்' என்று நற்றிணை கூறுகின்றது.

ஆங்கிலத்தில் Velvet நிறம் என்று கூறுவர்

'கடு' ஏன்ற சொல் வழக்கைக் கூர்மை யாகக் கவனிக்க வேண்டும். பசு கன்றை ஈன்ற வுடன் அதன் பால் கெட்டியாகவும், கொழுப்பு மிக்கதாகவும் இருக்கும். அதனால் 'கடும் பால்' என்று வழங்குகின்றனர். சில இடங்களில் சீழ்ம்பால் என்று வழங்குவர்.

அதனால், எதுவும் மிக்கு இருப்பின் 'கடும்' என்ற சொல்லைப் பயன்படுத்துவது வழக்கம். ஆதலின், 'கடுஞ்செம் மூதாய்' என்று நற்றிணை கூறியுள்ளது.

இந்தப் பூச்சியைத் தொட்டால் 'வெல்வெட்' என்ற ஆடையைப் போல் மிகமிக மெதுவாக இருக்கும்.

''தண்பெயல் பொழிந்த பைதிறு காலை'' யிலும்,

"இன்குரல் அழிதுளி தலைஇ நன்பல
பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறை" யிலும்,

மூதாயைக் கண்ட சங்கநூற் புலவர்கள் கூறியுள்ள செய்தி சிறப்பான இயற்கைச் செய்தியாகும்.

## மழைக்காலப் பிறவி

நான் சிறுவனாக இருந்தபோது, இந்தப் பூச்சியை மழைக் காலம் தொடங்கியவுடன் காலையிலேயே பெரும்பாலும் கண்டிருக்கின்றேன். வெயில் வந்தவுடன் இப் பூச்சிகள் இருந்தவிடமே தெரியாது. ஆனால் மாலைக் காலத்திலும் இந்தப் பூச்சிகள் தரையில் ஊர்வதைக் காணலாம்.

"தலைநாட் கெதிரிய தண்பெயல் எழிலி
அணிமிகு கானத்து அகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டும் கொண்டும்
நீவிளை ஆடுக சிறிதே யானே"

நற்றிணை 362

## தலைவன் பேச்சு

மேலே காட்டப்பட்டுள்ள நற்றிணைப் பாட்டில் உடன் போக்கில் வந்த தலைவியிடம் தலைவன்,

"நான் ஆறலைக் கள்வரைப், போர் வரின் அஞ்சாது அவர் ஓடும்படி போர் செய்வேன். உன் சுற்றத்தார் தேடிவரின் வேங்கை மரத்தில் மறைந்துகொள்வேன்.

நீ முதற்பெயலைப் பெய்யத் தொடங்கிய குளிர்ச்சியான காட்டில், ஈயலின் மூதாயை நோக்கியும் அவற்றைப் பிடித்துச் சிறிது பொழுது விளையாடுவாயாக"

என்று சொன்னதாகக் கூறப்பட்டுள்ளது.

நான் இந்தப் பாடலைக் கல்லூரியில் படிக்கும்போது எனது இளமைக் கால விளையாட்டை நினைவு கூர்ந்து இப் பூச்சியைப்பற்றி அப்போதே குறிப்பெடுத்து சங்கநூற் செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்த்த குறிப்புகளை இப்பொழுது படித்தேன். நாலாயிர திவ்ய பிரபந்த ஈட்டில் இந்தப் பூச்சியை பற்றிய செய்திகளையும் குறிப்பெடுத்திருந்தேன்.

# வெட்டுக்கிளி

இந்த விட்டில் பூச்சிகள் அரியதாக சில ஆண்டுகளில் வடமேற்கு நாடுகளிலிருந்து தென்னகத்திற்கு வலசை வந்து, நெற்பயிரை முற்றிலும் அழித்து விடுகின்றன. ஆதலின் ஒரு நாட்டிற்கு வரும் பெரும் ஊறுகளில் விட்டிலும் கூறப்பட்டுள்ளது.

வெட்டுக்கிளி என்ற வழக்கு 'விட்டில் கிளி' என்று வழங்கியிருக்க வேண்டும். கிளி என்ற சொல் கிள்ளுவது என்ற பொருளையுடைய தாகும். அதனால்தான் இந்தப் பூச்சியை விட்டில் கிளி, வெட்டுக்கிளி என்றழைத்தனர்.

சில பழங்குடி மக்கள் பல பறவைக்ளையும் 'கிளி' என்ற கடை அடை மொழியுடன் அழைப் பதையும் பார்க்கலாம்.

விட்டில் பூச்சி ஆங்காங்கே நெற்பயிர்த் தாளினைத் தின்று வெட்டுவதைப் பார்த்திருக் கின்றேன். அது போன்றே தேவாரத்தில் கூறப் படும் பாரய் மரத்தில் வெண்மையான பட்டை

யையுடைய மரத்தின் பட்டையில் அங்கொன் றும் இங்கொன்றுமாக வெட்டப்பட்டதைக் காண லாம். அதனால் கன்னட மொழியில் இந்த மரம் 'மிட்டில்' என்று அழைக்கப்பட்டது.

விட்டில் என்ற பெயர் மிட்டில் ஆக மாறு வது மொழி நூல் ஆராய்ச்சியின்படி சரியே யாகும்.

இந்த விட்டில் பூச்சிகள் மிக மிக அழகாக இருக்கும். நான் சிறுவனாக இருந்தபோது இந்தப் பூச்சியின் அழகையே போற்றினேன். இந்தப் பூச்சிகளினால் நாட்டுக்கு ஏற்படும் பெரும் ஊறு தெரியவில்லை. என் சிறுவயதில் இந்த விட்டில் பூச்சிகளை முனைந்து பிடித்த போது ஒரு கிணற்றோரத்தில் இருந்த கலியாண முருங்கை மரத்தில் காணப்படும் - சிறிது வளைந்த - முற்களைப் போலவே கொம்புடைய ஒரு பூச்சி அந்த மரத்தில் நிறைய இருப்பதைக் கண்டேன்.

இந்தப் பூச்சிக்கு தலையின் நுனியில் ஒரு கொம்பு உண்டு. இந்த வளைந்த கொம்பு போலவே கலியாண முருங்கை மரத்தின் வளைந்த முள் இருப்பதால் யாவரும் முள் என்று நினைத்து இந்தப் பூச்சியைத் தொட மாட்டார் கள். இவ்வாறு போலித் தோற்றத்தால் (Mimicry) இந்தப் பூச்சி தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறது.

இந்தப் பூச்சி கலியாண முருங்கையின் இலைகளைத் தின்று வாழ்வதைக் கண்டேன்.

ஆனால் இதுவரை என்னால் கலியாண முருங்கை மரத்தில் கண்ட இந்தப் பூச்சியை அறிவியல்படி அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இன்னும் சிறிது காலத்தில் கண்டு கொள்வேன்.

பூச்சிகளின் ஆச்சரியமான சூழ்நிலைக் கேற்ப மாறும் நிறமாற்றத்தைப் பற்றி மேலை நாட்டில் மிகவும் ஆராய்ந்துள்ளனர்.

புகைவிடும் தொழிற்கூடங்கள் நிறைந்த சூழ்நிலையில் வேட்டையாளரிடம் இருந்து சில இரவுக் காலத்துப் பட்டுப் பூச்சிகள் கருப்பு நிற மாகவே மாறி விடுகின்றன என்று அண்மையில் இங்கிலாந்து நாட்டில் அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.

சங்க காலத்தில் பூச்சிகளைப் பற்றி இயற்கை அடிப்படையாகக் கண்டு கூறிய அறிவியற் செய்திகளைக்கூட நாம் இன்றும் கண்டறியாதிருப்பதை எண்ணி வருத்தப்பட வேண்டியுள்ளது.

## நான் வளர்த்த கதை

இந்தப் பூச்சியைத் திண்டிவனத்தில் Hope villa என்ற வளாகத்தில் இருந்த கால் பந்துத் திடலில் 'கண்டும் கொண்டும்' விளை யாடி யிருக்கின்றேன்.

பள்ளி மாணவனாக இருந்தபோது பட்டாம் பூச்சியைப் பிடிப்பதிலும், தும்பிகளைப் பிடிப்

பதிலும், வெட்டுக் கிளிகளைப் பிடிப்பதிலும் மூதாய் என்ற பட்டுப் பூச்சியைப் பிடித்து வளர்ப்பதிலும் ஆர்வமுடையவனாக இருந்தேன். தும்பிகளில் கரிய நிறமுடைய பேய்த் தும்பியையும் ஊசித் தும்பியையும் வேறு பல தும்பிகளையும் பிடித்திருக்கின்றேன். தாழப் பறந்து, மழை வரும் என்று குறிகாட்டும் சிவப்புத் தும்பியையும் பிடித்திருக்கின்றேன். வெட்டுக்கிளிகளில் பச்சை வெட்டுக்கிளி, தொன்னை வெட்டுக்கிளி, பழுப்பு வெட்டுகிளி முதலிய வெட்டுக்கிளிகளைப் பிடித்து விளையாடி இருக்கின்றேன்.

ஒரு தடவை ஆயிரக்கணக்கான வெட்டுக் கிளிகள் நெல் பயிரில் இருக்கக் கண்டு அவைகளைப் பிடித்தேன். அவைதான் தென்னாட்டிற்கு வலசை வந்து பயிர்களை அழிக்கும் 'விட்டில்' என்று கண்டு கொண்டேன்.

ஆனால் அக்காலத்திலேயே இயற்கையில் மிகமிக அழகான பஞ்சவர்ண வெட்டுக்கிளியைப் (Poceilocerus pictus) பிடித்து அதற்கு அது தங்கித் தின்று வாழ்ந்த சுக்கான் கீரைத் தழையைப் போட்டுக் கூட்டில் வளர்த்தேன்.

ஆனால் பூச்சி நூல் அறிஞர்கள் (Entomologists) எருக்கஞ் செடி இலைகளைத் தின்பதாகக் கூறுவர். அது போலப் பொன்வண்டைப் பிடித்து அதற்குக் கொடுக்காப்புளி இலையைக் கொடுத்து வளர்த்திருக்கின்றேன்.

ஆனால் மூதாயின் உணவு அப்போது சிறியவனான எனக்குத் தெரியவில்லை. அதனால் அவை இறந்தன.

'மூதாய்' என்ற பட்டுப்பூச்சியினைப் பிடித்துக் கூட்டில் அடைத்து, அதனுடைய உணவு என்று நான் கருதிய புல்லைப் போட்டு வளர்த்துப் பார்த்தேன். ஆனால் இந்தப் பூச்சியின் இயற்கை உணவு புல் அன்று.

நான் சில ஆண்டுகளுக்கு முன் இந்த விந்தைமிகு பூச்சியைப் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் துறையில் இருந்த அறிஞர்களிடையே இந்தப் பூச்சியின் பழக்க வழக்கங்கள் எவையென்று கேட்டேன்.

இந்தப் பூச்சியைப் பற்றி அறிவியலார்கூட அதுவரை சரிவர ஆராயவே இல்லை.

பூச்சி நூல் அறிஞர்கள் நன்மைதரும் பூச்சிகளையும், தின்மை தரும் பூச்சிகளையும் மட்டும் ஆராய்கிறார்கள். நன்மையும் தின்மையும் தராத இந்தப் பூச்சியை ஆராய்ந்தாரில்லை.

இயற்கையில் உள்ள இந்த மிக அழகிய பூச்சியை அறிவியல் அறிஞர்கள் ஆராயதது பெரிய குறையே.

## தொடர்ந்து அறிதல்

இந்தப் பூச்சி மேல்நாடுகளில் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் [illegible]ணட்டும் பூச்சி

உருவில் பெரியதாக உள்ளது என்று பூச்சி களைப் பற்றிய நூலில் படித்தேன்.

இந்தப் பூச்சியின் அறிவியல் பெயரைத் தெரிந்து கொள்ள பல ஆண்டுகளாக முயன் றேன். கடைசியில் நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் கண்டு பிடித்தேன்.

சங்கப் புலவர்கள் இயற்கை அறிவோடு கூறிய ஓர் அழகிய பூச்சியை இன்றும் நமது தமிழர்கள் நன்கு அறியாதிருக்கிறார்கள். இந்தப் பூச்சியைப் பற்றிச் சங்க நூல்கள் கூறும் செய்தி கள் அரிய அறிவியற் செய்திகளாகவும், இயற் கைச் செய்திகளாகவும் இருப்பதைக் காணும் போது வியப்படையாமல் இருக்க முடியாது.

இப்பூச்சி கார் காலத்தில் முதல் மழையில் தோன்றுவது; புல்வெளியில் தோன்றுவது; முல்லை நிலத்தில் தோன்றுவது என்று சொல் லப்பட்டிருப்பது முற்றிலும் உண்மையாகும். அறிவியலாரும் கண்டறியாதது.

நான் இந்தப் பூச்சியைப் பிடித்தும் வளர்த் தும் பார்த்த பட்டறிவின் காரணமாக உண்மைச் செய்தியைக் கூறுகின்றேன்.

## விளக்கமான செய்தி

மற்றும் ஓர் இயற்கைச் செய்தியைக் குறுந் தொகை கூறுகின்றது. அரிய செய்தி. இயற்கை யான செய்தி. நான் சிறுவனாக யிருந்தபோது கண்ட செய்தி.

"காமம் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே"
குறுந்தொகை 204

பழங் கொல்லையாகிய மேட்டு நிலத்தில் தழைத்த முதிராத இளைய புல்லை முதிய பசு நாவால் தடவி இன்புற்றாற் போல, நினைக்குங் காலத்தில் அக்காமம் புதிய இன்பத்தை உடையதாகும் என்று உரை கூறப்பட்டுள்ளது.

இந்த உரை தவறு என்பதை,

"மூதாவா, மூதாயா?"

என்ற தலைப்பில் 1965 'செந்தமிழ்ச் செல்வி' யில் நான் எழுதிய கட்டுரையில் விளக்கியுள்ளேன்.

'விருந்தே காமம்' என்ற வரியில் வரும் 'விருந்து' என்பதற்குத் தொல்காப்பியர் கூறிய விளக்கத்தின்படி 'புதியது' என்பதே பொருளாகும்.

குறுந்தொகை உரையிலும், 'விருந்தென்பது புதிதாகத் தோன்றிச் சிறிது பொழுதில் அழிவதென்றும், என்றும் நிலை நிற்கும் நற்குணமென்றும் உணர்த்தியபடி' என்று அறிஞர் உ. வே. சாமிநாதய்யர் உரையில் கூறப்பட்டுள்ளது. இந்த உரையை முக்கியமாகக் கருத வேண்டும்.

மூதாய் என்ற பூச்சியும் புதிதாகத் தோன்றிச் சிறிது பொழுதில் மறைந்ததை நான் பட்டறிவு வாயிலாக இளமைக் காலத்தில் கண்டறிந்தேன். இந்தப் பூச்சி நிலையாக நிற்கும் தன்மை இல்லாததையும் அறிந்தேன். மற்றும் முக்கியமாக இந்த மூதாய் என்ற பூச்சி, புல்லுடைய மேட்டுப் பாங்கான நிலத்தில் இருந்ததையும் நான் கண்டுள்ளேன்.

**பூச்சியின் உணவு பூச்சி!**

ஆதலின் குறுந்தொகையில் கூறிய

'முதைச்சுவற் கலித்த முற்றா இளம் புல்
மூதா தைதாங்கு'

என்று கூறிய வரியில் அரிய பெரிய இயற்கைச் செய்தி கூறப்பட்டிருப்பதை நினைந்து நினைந்து இன்புற்றேன்.

வெளிநாட்டு அறிவியல் ஆராய்ச்சியாளர் நூலில் கூறியபடி இந்தப் பூச்சி நிலத்தில் கூடு கட்டி வாழும் சிறிய குளவி முதலிய பூச்சிகளை வேட்டையாடித் தின்று வாழ்வதாகத் தெரிகின்றது.

இந்தப் பூச்சி அரை அங்குலம் நீளம் உடையது என்று இந்திய பூச்சியாராச்சியாளர் கூறுவர்.

'அக்காரினா' (Accarina) என்ற பூச்சியினக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று இதைப் பற்றி ஒரு வெளிநாட்டு நூல் கூறும் செய்தி கூர்ந்து கவனிக்கத்தக்கது.



இரலை மான்

## இரலை மான்

கார் காலத்தில் மூதாயைக் கூறிய பாடல் களில் இணைவிழைக் காலத்தில் இரலை மான் கள் துள்ளிக் குதிப்பதையும் கூறியது அரிய இயற்கைச் செய்தியாகும். இரலை மானை வெளிமான் என்று தற்பொழுது அழைப்பர்.

இப்பொழுது சென்னையில் கிண்டிப் ங்காக் காட்டிலும், வேதாரண்யம் காட்டிலும் இந்த வெளிமான்களைப் பார்க்கலாம்.

முல்லை நிலத்தில் கார்காலத்தில் அணி செய்வதாக மூதாய் பூச்சியையும், பீடுநடை போடும் இரலைீ மானையும் கூறியது சங்கப் புலவர்களின் அறிவியல் இயற்கை நுண்ணுணர்ச் சியைக் காட்டுகின்றது.

மூதாயைப் பட்டுப்பூச்சி என்று நாலாயிர திவ்விய பிரபந்த ஈட்டில் அழைக்கப் படுகின் றது. இந்தப் பெயர் பேச்சு வழக்காகும். இந்தப் பேச்சு வழக்கையே நான் பொதுவாகக் கேட் டிருக்கின்றேன்.

## தோன்றி மறைதல்

அறிவியல் நூலில் 'வெல்வெட்' போன்ற உடலுடையது என்று குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

சில இடங்களில் தற்காலத்தில் ‘வெல்வெட்’ ச்சி என்றும் அழைக்கின்றனர்.

இந்தப் பூச்சி முதல், மழையில் திடீரென்று தோன்றுவதால் ‘உயிர்த்தெழும் பூச்சி’ என்றும் அழைக்கின்றனர்.

அடை மழையில் இந்தப் பூச்சி முற்றிலும் மறைந்து விடுகின்றது.



# மலரும் மணியும்

## காயா மரம்

"மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்
புலனணி கொண்ட காரெதிர் காலை"

என்று அகநானூற்றுப் பாடல் (304) கூறுகின்றது.

நான் மழைக் காலத் தொடக்கத்தில் ஒரு நாள் விடியற்காலையில் சென்னைக்குச் சென்ற போது, இப்பொழுது மறைமலை அடிகள் நகர் நிறுவப்படும் புறநகர் - முன்னர் குறுங் காடாக இருந்த இடத்தில், அகநானூற்றில் கூறப்பட்ட அக்காட்சியைக் கண்டேன்.

முல்லை நிலத்துக் குறுங் காட்டில் வாழும் ஒரு குறுமரம் காசா என்பதாகும்.

இந்தக் குறுமரத்தின் அறிவியல் பெயர் Memccylon edule என்பதாகும்.

**நீல மலர்**

இந்தக் குறுமரத்தின் பூ நீல நிறமுடைய தாகும். இந்த நீல நிறத்தையுடைய பூவை நீல மயிலுக்கு ஒப்பிட்டுக்

'கருநனைக் காயாக் கணமயில விழவும்'

என்று சிறுபாணாற்றுப்படை (வரி 165) கூறுவதையும் கருத வேண்டும்.

இந்த மலரைக் கண்ணனின் உடல் நிறத் நிறத்திற்கு ஒப்பிட்டுக் கூறுவதை வைணவ இலக்கியங்களில் காணலாம்:

'காயமலர் திறவா'

(திவ்வியபிரபந்தம்,
பெரியாழ்வார், 1, 5, 6)

ஆனால் இயற்கை அறிவியல் அறிவில் (Nature study காயாவின் உதிர்ந்த பூவையும், அதன் அருகில் ஊர்ந்த மூதாயையும் 'மணி மிடைபவளம்' என்று ஒப்பிட்ட உவமைப் பெயர் மிக அரிய பெரிய பெயராகும்.

**காயா மலர்**

காயாவின் பூ சிறியதாக இருக்கும். பூவின் நிறம் கருநீலமாக இருக்கும். பூவின் புறவிதழ் சிகப்பாக இருக்கும். கரு நீல அகவிதழும் சிவந்த புறவிதழும் விழுந்த காட்சியைக் கண்டு 'மணிமிடை பவளம்' என்று கூறியிருக் கலாம்.

காயாவின் பூவை அறிவியலில் "Most delightful deep blue colour which confined with calyx which is often red, are very pretty என்று விளக்கியுள்ளனர்.

காயா மலரின் அறிவியல் பெயர் Memecylon Umbellatum என்பதாகும்.

## நீலமும் சிவப்பும்

இந்த நீலக் காசாம்பூ இதழ்கள் விழுந்த தரையில் 'காரெதிர்காலை' ஈயல் மூதாய் ஈர மணற் புறத்தை வரிப்ப மணிமிடை பவளம் போல அணி மிகுந்து புலன் அணி கொண்டதைக் கண்கூடாகக் கண்டேன்.

இந்தக் காட்சியை அகநானூற்று (304) பாடலில் பாடிய இடைக்காடனார் மாபெரும் புலவர் என்பதில் ஐயமில்லை. இடைக்காடனார் இரண்டு பாடல்களில் அகநானூற்றில் இந்தப் பூச்சியைப் பாடியுள்ளார்.

இந்தப் பூச்சியும் முல்லை நிலப் பூச்சியாகும். முல்லை நிலத் திணைக்குரியவர் இடையராவர். அந்த நிலத் திணைக்குரிய பெரும் புலவர் ஒருவர் இந்த அரிய அழகிய பூச்சியை இரண்டு பாட்டுக்களில் பாடினது சிறப்பான தாகும்.

"மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப"

என்ற அகநானூற்று 304 ஆம் பாடல் நித்திலக்கோவைத் தொகுதியில் வருகின்றது. அது போலவே,

> "மணிமண்டு பவழம் போலக் காயா
> அணிமிகு செம்மல் ஒளிப்பன மறைய"

என்ற அகநானூற்று 374 ஆம் பாடலும் நித்திலக் கோவையில் தான் காணப்படுகின்றது.

## நீலமணி

ஈழநாடு சோழர்களின் ஆட்சியில் இருந்தது. அதனால் நீலநிற மணிகள் (Sapphire) நிறைய கிடைத்த ஈழநாட்டில் இருந்து ஏராளமாய்த் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து மேலை நாட்டுக்குச் சங்ககாலத்திலும் (கி. மு. இரண்டுக்கும் கி. பி. இரண்டுக்கும் இடைப்பட்ட காலம்) பிற்காலச் சோழர்கள் காலத்திலும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

அகநானூறு தொகுக்கப்பட்டது, பிற்கால சோழப் பேரரசுக் காலமாகலாம்.

## பவளம்

பிரவாளம் எனப்படும் பவளம் மேல் நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு இறக்குமதியானது.

பிரவாளம் வட சொல்லாகும். தமிழ்ச் சொல்லையும், வடமொழிச் சொல்லையும் சேர்த்து 'மணிமிடை பவளம்' என்று அகநானூற்றில் இரண்டாவது தொகுதிக்குக்



அகநானூற்றின் முதற் பகுதி 'களிற்றியானை நிரை'
என்பது ஆண் யானையை உவமைப்படுத்துகிறது.

கூறியது மிக அரிய - நுண்ணிய - அழகிய வழக்காகும். களிற்றியானை நிரை என்ற பெயருடைய அகநானூறு முதற் பகுதியும் கருதத்தக்கது.

'குணகடல் துகிர்' என்று பட்டினப்பாலையில் கூறியிருப்பினும் அந்தத் 'துகிர்' என்ற பவளம் குணகடலில் விளைந்ததில்லை.

கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுடன் கொண்ட வணிக வரலாற்றை எழுதிய கிரேக்க, உரோம வரலாற்று நூலாசிரியர்கள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்த உயர்ந்த முத்தையும் மேல்நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு இறக்குமதியான பவளத்தையும் கூறியுள்ளனர்.

இந்தப் பவளம் உயர்ந்த வகையான பவளமாகும். அதை அக்காலத்திலேயே Alexandrian Coral என்றழைத்ததைக் காணலாம்.

ஆதலின் 'குணகடல் துகிர்' என்பதற்குத் தமிழ்நாட்டின் கிழக்குக் கடலில் பவளம் விளைந்ததாக விளக்கம் கூறியது தவறாகும். சிறந்த பவளம் அக்காலத்திலேயே இத்தாலியக் கடலில்தான் விளைந்தது.

உரோமை நாட்டுடன் கிறிஸ்துவுக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் வணிகத் தொடர்பு கொண்ட பண்டைத் தமிழன் பவளத்தை நன்கு தெரிந்திருந்தான். ஆதலின் அந்தப் பவளம் தமிழ்நாட்டில் நிறைய இறக்குமதி செய்யப்பட்டு வழங்கலாயின.

## மணிமிடை பவளம்

சங்க காலத்தில்,

'மணிமிடை பவழம்'

'பவளமொடு மணிமிடைந்தன்ன'

என்றஅரிய பெயர் வழக்கு உவமைகளைச் சங்கப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

### மணிப் பிரவாளம்

அந்த அரிய வழக்கைப் பின்பற்றியே மிக மிகப் பிற்காலத்தில் வைணவர்களின் நூல்களிலும் உரைநடைப் பெயருக்கு 'மணிப் பிரவாள நடை' என்ற வழக்கு தோன்றிற்று.

மலையாளத்திலும் தமிழ் மரபை ஒட்டி மணிப்பிரவாளம் என்ற வழக்கு வந்தது.

ஆதலின் மணிப்பிரவாளம் என்ற வைணவ வழக்கும், உரைநடை பற்றிய மலையாள வழக்கும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சங்க நூலான அகநானூற்றுப் பாடல்

உவமை வழக்கை ஒட்டியதாகும் என்பதை உணர வேண்டும்.

மணிமிடை பவளம் என்ற சொற்றொடரில் கூறப்பட்ட மணி நீலமணியாகும். காயாம் பூவின் நிறம் நீலமாகும். நீலமும் (Sapphire), பவளமும் சேர்ந்த கோவையையே சங்கக் காலத் தமிழன் ஒரு சிறந்த அணிகலனாக விரும்பினான்.

## நித்திலக் கோவை

மற்றும் தமிழ் நாட்டில் விளைந்த முத்துக் கோவையையும், சிறந்த அணிகலனாகத் தமிழன் கருதினான்.

நித்திலக் கோவை என்று மூன்றாவது அகநானூற்றுத் தொகுதிக்குப் பெயரிட்டான். முத்துக் கோவை ஆரத்தியில் பருமுத்து நடுவிலும், குறுமுத்து மேலும் இருக்க நித்திலக் கோவை அமைந்திருந்தது.

'மணிமிடைபவளம்' என்ற வழக்கு செயற்கையில் காட்சியளவில் முரண் தொடையாகும்.

முரண்தொடை Compare and contrast என்ற ஆங்கிலமொழி இலக்கிய முறையாகும். சொல்லிலக்கணம் முரண் தொடையைக் கூறுகின்றது. பொருளளவில் கூறிய முரண்தொடை 'மணிமிடைபவளம்' என்ற வழக்காகும்.

ஈமுதாய் என்ற இந்த அழகிய பூச்சியைச் சங்க நூல்கள் உவமித்த அழகிய வழக்கை ஒட்டி அகநானூற்றைப் பிற்காலத்தில் தொகுத்ததும், மற்றும் வைணவ உரை நூலான 'ஈடு' அதே வழக்கைப் பயன்படுத்தியதும் குறிப்பிடத்தக்க தாகும். சங்ககால மரபை இரண்டாயிரம் ஆண்டு வரை பின்பற்றியது குறிப்பிடத்தக்க தாகும்.

## மணி வகை

நம்பிள்ளை ஈடு முப்பத்தாராயிரப்படி அவதாரிகையில் விஷ்ணு புராணம் கூறுவதாகச் சொல்லப் பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

"தோன்றிய புற்களாலே நிரம்பி இந்திர கோபம் என்னும் பட்டுப்பூச்சுக்கள் பரவப்பெற்ற பூமியானது, இடைஇடையே பத்மராகக் கற்கள் பதித்த மரகத மணி மயமானது ஒரு இடத்தைப் போன்றது" என்று கூறப்பட்டுள்ளதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இங்கு சங்க நூற்களின் தொகுப்பைப் பெயரிட்ட உவமையான மணிமிடை பவளம் என்ற வழக்கு வேறு முறையில் விளக்கப்பட்டுள்ளது. படர்ந்துள்ள புல்லில் இந்திர கோபப் பூச்சிகள் நிறைந்திருந்ததை, இடையிடையே பத்மராகக் கற்கள் பதித்த மரகதமணியுடன் சேர்ந்த காட்சியைப் போன்று இருந்தது என்று கூறிய வேறு விளக்கம் மணிப்பிரவாள நடையில் உள்ள ஈட்டில் வருவது குறிப்பிடத் தக்க தாகும்.

சிலப்பதிக்காரத்தில் பதுமராக மணி கூறப் பட்டுள்ளது.

"பதுமமு நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்"

—வரிகள் 186 - 187

ஊர்காண்காதையில் வரும் இந்த வரிகளின் உரையில் பதும ராகம் நால்வகைச் சாதி மாணிக்க வர்க்கத்தில் ஒன்று என்று கூறப் பட்டுள்ளது.

"மாணிக்கத்தியல் வகுக்கும் காலை சமனொளி சூழ்ந்த வொரு நான்கிடமும், நால் வகை வருணமும் நவின்ற விலைப்பெயரும், பன்னிரு குணமும் பதினரு குற்றமும், இருபத் தெண்வகை யிலங்கிய நிறமும், மறுவிய விலை யும், பத்திபாய்தலும் இவை பயன் மொழி வியல்புணர்ந்தோரே"

என்று உரை கூறப்பட்டுள்ளது.

இவற்றுள் "பதுமம், பதுமராகம், சதுரங்கம் எனபது அது" என்று கூறப்பட்டுள்ளதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

## பழைய எடுத்துக்காட்டு

"தாமரை, கழுநீர், சாதகப் புட்கள்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு
மாதுளம் பூவிதை, வன்னியீ ரைந்தும்
ஓது சதுரங்க வொளியா கும்மே"

என்று அடியார்க்கு நல்லார் ஒரு மணி நூலி லிருந்து எடுத்துக் காட்டியுள்ளார்.

இங்கு, பதுமராகக் கல்லின் நிறத்திற்கு ஒப்பிட்டுக் கூறிய மலர்களின் நிறம், இந்திர கோபம் முதலிய பூச்சிகளின் நிறம், விளக்கின் சுடர், மாதுளம் பூ விதையின் நிறம் எல்லாம் சிவப்பு என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்தச் சிவப்பு நிறத்திலும் சில நுண்ணிய வேற்றுமை கள் (Subtle Shades of Colour) உண்டு. இந்த நிற வேற்றுமைகளைக் குறிக்க முந்திய காலத் தில் போதிய சொற்கள் இல்லாமையால் இவ் வாறு மலர்களின் நிறத்தையும் பறவைகளின் கண்ணின் நிறத்தையும் வேறு பொருட்களின் நிறத்தையும் ஒப்பிட்டுக் காட்டினர்.

## பதுமராகம்

மணிப் பிரவாள நடையில் எழுதப்பட்ட ஈட்டில் கூறப்பட்ட விஷ்ணு புராண விளக்கம் மாறுதலாக இருப்பதைக் காணலாம். மணி மிடை பவளம் என்ற வழக்கிலும், மணிப்பிர வாளம் என்ற நாலாயிர திவ்ய பிரபந்த உரை வழக்கிலும், மலையாள உரை நடையான மணிப் பிரவாளம் என்ற வழக்கிலும், குறிப்பிடப்பட்ட மணி நீல மணியா யிருப்பினும் விஷ்ணு புராண விளக்கத்தில் நீலக் கல்லை மணியாகக் கூறப் படவில்லை. ஆனால் மாணிக்கங்களில் ஒரு சாதியான பத்மராகக் கல் மணியாகக் கூறப் பட்டுள்ளது.

பத்மராகக் கல் சிவப்பு நிறமுடையதால் இது பவளத்திற்கு இணையாகக் கூறப்பட்டுள்ளது. பத்மராகக் கல்லிற்கு முரண் அணியாக மரகத மணியைச் சேர்த்துள்ளதையும் காணலாம்.

மணிமிடைப் பவளம் என்ற வழக்கும், மணிப்பிரவாளம் என்ற வழக்கும், நீல மணியையும் சிவந்த பவளத்தையும் இணைசேர்த்த அணியையே குறித்தது. சிவந்த மாணிக்கமான பத்மராகத்தையும் மரகதத்தையும் சேர்த்துக் கூறியது புதியதாகும். இந்த ஈட்டு உரை உவமையில் இந்திர கோபப் பூச்சியைச் சிவந்த பத்மராகக் கல்லோடு ஒப்பிட்டு இருப்பதைக் காணலாம்.

சங்க நூல்களில் நீல மணியும் பவளமும் சேர்ந்த அணிகலனே உவமையாகக் கூறப்பட்டது. ஆனால் மணிப்பிரவாள ஈட்டில் (பதுமராகம்) மாணிக்கமும், மரகதமும் இணைத்து உவமைகளாகக் கூறப்பட்டது வியப்பாக உள்ளது. அதில், மாணிக்கத்தில் (Ruby) ஒரு வயையான பதுமராகம் இந்திர கோபப் பூச்சிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

சிவப்பு நிறத்தின் காரணமாகவும் இந்திர கோபப் பூச்சியின் நிறமாகக் காணப்பட்டதாலும் இவ்வாறு கூறப்பட்டது. சங்க நூல்களில் முரண்தொடை மணிகளாக நீலமும் பவளமும் கூறப்பட்டுள்ளன. கட்டுரையில்

முரண்தொடை மணிகளாக மாணிக்கமும், மரகதமும் கூறப்படுகின்றன.

**தோன்றி**

நாலாயிர திவ்ய பிரபந்த ஈடுகளில் பல அரிய இயற்கைச் செய்திகள், அறிவியற் செய்திகள் காணப்படுகின்றன. இந்திர கோபப் பூச்சியைப் பற்றித்

> "தோன்றிய புற்களாலே நிரம்பி இந்திர
> கோபம் என்னும் பட்டுப் பூச்சுக்கள்"

என்று கூறப்பட்டுள்ளதில் 'தோன்றிய' என்ற வழக்கு கவனிக்கத் தக்கதாகும்.

கார் காலத்தில் முதல் மழை பெய்தவுடன் இந்திர கோபப் பூச்சி தோன்றிய இளம் புல்லில் திடீரென்று நிரம்பிக் காணப்படுகின்றது. இப் பூச்சி அடைமழைக் காலத்தில் மறைந்து விடுகின்றது.

கடும் வெயிலில் புற்கள் வறண்டுபோய் முதல் மழையில் புற்கள் தோன்றும்போது இந்தப் பூச்சியும் தோன்றுகிறது. இது போன்று, சங்க நூல்களில் கூறப்பட்ட காந்தள் பூவும், கார் காலத்தில் கார்த்திகைத் திங்களில் திடீரென்று தோன்றுகின்றது. சாலைகளில் வேலியோரக் கள்ளிகளின் மேல் மகளிர் கை விரல்கள் போல, பல நிறங்களில் பூக்கள் தோன்றுவதால் "தோன்றி" என்று சங்க நூல்கள் அழைத்தன.

மலையாள மொழியில், வேலியின் மேல் திடீ ரென்று மழைக் காலத்தில், அழகிய, கண்ணைக் கவரும் காந்தளின் பூக்கள் தோன்றுவதால் அதனை "மேந்தோன்னி" என்று அழைப்பர்.

புலவர் அவையில் சிறந்து விளங்கிய பாண்டிய வேந்தனை "மேந் தோன்றி" என்று மதுரைக் காஞ்சி அழைப்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆதலின் "தோன்றிய புற்களாலே நிரம்பிய இந்திர கோபம்" என்று சொல்லப்பட்ட விளக்கம் அரிய - இயற்கை அறிவியல் விளக்க மாகும். மற்றும் இந்தப் பூச்சியைப் 'பட்டுப் பூச்சி' என்று நாட்டு மக்கள் அழைக்கின்றனர்.

நாலாயிரத் திவ்ய பிரபந்த ஈடு எழுதப்பட்ட போதும், இந்த வழக்கே இருந்தது என்று தெரி கின்றது. ஆனால் "பட்டுப்பூச்சு" என்று வழங் கியதையும் கவனிக்க வேண்டும். இன்று பட் டாம்பூச்சி என்பது (Butter Fly) பறக்கும் பூச்சி யைக் குறித்து வழங்குவதையும், ஈட்டில் பறக் காத பட்டுப் போன்ற - 'வெல்வெட்டு' போன்ற உடல் உடைய பூச்சியைப் 'பட்டுப் பூச்சு' என்று குறித்ததையும் கவனிக்க வேண்டும்.

**'சகலாத்து'**

புதுவை ஆனந்தரங்கப் பிள்ளை தன் நாட் குறிப்பில் 'வெல்வெட்' என்ற மென்மை மிக்க துணியைச் 'சகலாத்து' என்று கூறியுள்ளார்.

இந்த வழக்கு பெர்சியன் மொழியிலிருந்து வந்த தாகத் தெரிகின்றது.

இந்தச் 'சகலாத்து' என்ற வெல்வெட் துணியை அரசர்களுக்கும் குறுநிலத் தலைவர் களுக்கும் அன்பளிப்பாக வழங்குவது பிரெஞ்சு அரசின் பழக்கமாக இருந்தது. அதன் காரண மாகவே 'சகலாத்து' என்ற சொல்லை ஆண் பெண்களின் பெயராகவே அண்மைக் காலம் வரை புதுவையிலும் அதையொட்டிய இடங் களிலும் பயன்படுத்தினர்.

மூதாய் என்ற பூச்சியின் மிகப் பிற்காலப் பெயர் 'வெல்வெட் பூச்சி' என்று வழங்கி வருதலையும் இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

## அபிதான சிந்தாமணி

அபிதான சிந்தாமணியில் 'இது பட்டுப் போல் மழமழத்த உருவமுடைய சிறு பூச்சி. செம்பட்டின் தோற்றமுடையது. இது பூமியில் காணப்படின் பட்டுத் துண்டுகளைத் துணித்தது போலக் காணப்படும். இதனைத் தம்பலப் பூச்சென்பர்' என்று விளக்கம் கூறியுள்ளதைக் காணலாம். இன்று பூச்சி என்று கூறும் பெயர் முன்னால் பூச்சு என்றே வழங்கியிருக்கின்றது.

சித்த மருத்துவத்தில் இந்திர கோபப் பூச்சி யின் காய்ந்த உடலை வீரிய விருத்திக்காக இலேகியங்களில் சேர்க்கும் பழக்கம் இன்றும் உள்ளது.



அலங்கு அல்லது நலுங்கு (எறும்புண்ணி)

## விந்தை விலங்கு

இங்கு மற்றொரு முக்கியமான உயிரியைப் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும்.

முத்து என்ற சொல்லின் மிகப் பழைய உருவம் 'முத்தில்' என்று இருக்க வேண்டும் என்று 'செல்வி'யில் ஏற்கெனவே எழுதியுள்ளேன். மலையாளத்தில் இத்தில், முற்றில் என்ற பெயர்கள் கிளிஞ்சல்களுக்கு வழங்கியதைக் கண்டு கேட்டறிந்துள்ளேன்.

கிளிஞ்சலைப் போலச் செதில்களை உடைய 'எறும்புத் திண்ணி' என்ற விலங்கை மலையாளத்தில், 'இத்தில் முள்ளன்' என்று நாட்டுப்புற மக்கள் அழைப்பதைக் கேட்டிருக்கின்றேன். கிளிஞ்சலைப்போல உடலில் முள்ளையுடைய விலங்கு என்ற பொருளில்தான் மலையாளத்தில் இந்தப் பெயர் வழங்கப்படுகின்றது.

எறும்புத் திண்ணி என்ற பெயர் ஆங்கில மொழியில் இருந்து மொழி பெயர்த்து வழங்கினதாகும்.

## நமது மனமாற்றம்

. பழைய தமிழ்வழக்குப் பெயர்களை மறந்து, திராவிடமொழிப் பெயர்களை மறந்து, அடிமைத் தனமாக - நமதுநாட்டு உயிரிகளுக்கு வழங்கும் நாட்டுப்புறப் பெயர்களை மறந்து, ஆங்கிலப் பெயர்களைப் அப்படியே மொழி பெயர்த்துப் பெயர் ஆக்கம் செய்து தற்காலத் தமிழ் அகராதி

களும் கலைக்களஞ்சியமும் செய்யும் பணி முறையானதன்று.

எறும்புத்தின்னியை நான் செஞ்சிமலையில் கண்டிருக்கின்றேன். அதை 'அலங்கு' என்றும், 'நலங்கு' - 'நலுங்கு' என்றும் கூறுவார்கள்.

அலவாங்கு என்ற பெயர் தோண்டும் கடப்பாரையைக் குறிக்கும். எறும்புத்தின்னியும் நிலத்தைத் தோண்டும் விலங்கு ஆதலால் நாட்டுப்புறத்தில் அலங்கு என்றும் நலுங்கு என்றும் அழைத்தனர்.

ஆனால் இந்தப் பெயர்கள், இந்த விலங்குக்கு உரிய பெயர்கள் அகராதிகளில் காட்டப்படவில்லை. 'எறும்புண்ணி' என்ற பெயர்தான் அகராதிகளிலும் கலைக்களஞ்சியத்திலும் காணப்படுகின்றது.

இதன் செதில் ஓடுகள் இன்றும் என்னிடம் உள்ளன.

## சிறுபாணாற்றுபடை காலம்

மூதாயைச் சிறுபாணாற்றுப்படை 'கோவம்' என்று அழைக்கின்றது.

சிறுபாணாற்றுப்படைச் சிங்க நூல்களில் ஒன்று என்று கருதப்பட்டாலும், மூவேந்தர்கள் மறைந்த-களப்பிரர்கள் காலத்தில் இயற்றப்பட்ட நூல் என்பது எனது கருத்தாகும்.

மூவேந்தர்களின் தலைநகர்களான "வஞ்சியும் வறிதே; மதுரையும், உறந்தையும் வறிதே" என்று கூறியிருப்பதால் மூவேந்தர்களின் அரசு வீழ்ந்தது என்பது புலனாகிறது.

சிறுபாணாற்றுப்படை அடிக் குறிப்பில் உ. வே. சாமிநாதய்யர், "வஞ்சியும் வறிதே, மதுரையும் வறிதே, உறந்தையும் வறிதே" என்று கூறுவதனால் மூவேந்தர்களும் இல்லை என்பது தெளிவாகின்றது

## வடமொழிப் பெயர்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் களப்பிரர் காலத்தில் சிறுபாணாற்றுப்படை இயற்றப் பெற்றதால் சங்கநூல் வழக்கான மூதாயை விடுத்து, வடநூல் வழக்கான 'இந்திர கோபம்' என்ற பெயரைச் சுருக்கியும் மாற்றியும் 'கோவம்' என்று கூறியுள்ளது. இவ்வழக்கு சிறுபாணாற்றுப்படை நூலானது சங்கநூற்களில் பிற்பட்டது என்பதைக் காட்டுகிறது.



## கடம்ப மலர்

"நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை
யோவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்"

சிறுபாணாற்றுப்படை,
வரி 68 71

சிறுபாணாற்றுப்படையில் இந்திர கோபப் பூச்சிகள் புல்வெளியில் பரந்திருந்தது, நீர்க் கடம்பின் சிவந்த மகரந்தத் தூள்கள் விழுந்த நீரின் பரப்பினைப் போல இருந்தது என்று ஒப்பிட்டிருப்பது மிக அரிய உவமையாகும்.

### கடம்பின் வகை

நிலக்கடம்பு வேறு, நீர்க்கடம்பு வேறு.

சங்கநூற் புலவர்கள் அறிந்த அளவு இக் காலத்தில் கடம்ப மரத்தின் வேற்றுமையை அறிந்தார் இல்லை.

சங்க நூல்களில் கூறப்பட்ட கடம்பு வெண் கடம்பு என்பதாகும்.

சிறுபாணாற்றுப்படையில் கூறப்பட்ட கடம்பு நீர்க்கடம்பாகும். அதை அறிவியலில் Barringtonia acutangula என்றழைப்பர்.

திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்ட கடம்பு Anthocephalus Cadamba என்பதாகும். வெள்ளையும் மஞ்சளும் கலந்த நிறமுடைய பந்து போன்ற பல சிறுமலர்களுடன் கூடியதாகும்.

நீர்க்கடம்பின் பூக்கள் மாலை போலத் தொங்கும்; கொன்றை மரத்தின் பூக்கள் தொங்குவது போலவே தொங்கும்.

நீர்க்கடம்பின் பூக்களில் புறவிதழ்களோ, அகவிதழ்களோ கண்டு கொள்ள முடியாதபடி மிகச் சிறியவை. ஆனால், நீர்க்கடம்பின் பூக்களின் மகரந்தத்தாள்கள் கடுஞ்சிவப்புடையவை. அந்த மகரந்தத் தாள்கள், பூக்கள் முதிர்ந்தவுடன் 'செம்மலாக' அதாவது வாடலாக நீர்ப்பரப்பில் உதிர்ந்தவுடன் நீர் அணி கோலம் கொண்டு காணும் காட்சி, கோபப் பூச்சிகள் புல்லிற் பரந்தாற் போல இருந்ததாம். இவ்வாறு கூறியது, அரிய பெரிய இயற்கையான உவமையாகும்.

## புதுவையில் கண்டேன்

இந்தக் காட்சியை நான் நேரில் புதுவை மாநிலத்தில் நெல்லித்தோப்பு வடிகால்

கால்வாயின் கரையோரம் கண்டேன். நீர்க்கடம்பின் சிவந்த மகரந்தத் தாள்கள் ஓவியம் போல விழுந்து கிடந்த காட்சியைக் கண்டுள்ளேன்.

மற்றும், வரலாற்றுச் சிறப்பு மிக்க பாகூர் ஏரியில் கரையோரத்தில் இருந்த நீர்க்கடம்பின் மகரந்தத் தாதுக்கள் விழுந்து, அது தந்த காட்சியையும் கண்டுள்ளேன். பாகூர் ஏரியில் இந்த மரங்கள் இப்பொழுது அழிந்துவிட்டன.

# கம்பர் தரும் காட்சி

## 'இந்திர கோபம்!'

இந்தப் பூச்சியின் நிறத்தை 'லிப்ஸ்டிக்' பூசிய இக்காலத்திய மடந்தையரின் உதட்டு நிறத்திற்கு ஒப்பிடலாம். இந்திரக்கோபப்பூச்சி இரத்தச் சிவப்பாக இருக்கும். மகளிரின் சிவந்த வாய்க்கு இந்திரகோபத்தைக் கம்பன் ஒப்பிட்டுக் கூறியுள்ளான். 'இந்திர கோபத்தைக் கௌவு வதற்கு வந்த பச்சோந்தி போன்று சீதையின் மூக்கு இருந்தது' என்று கம்பன் கூறுவது அரிய உவமையாகும். ஏனென்றால் பச்சோந்தியின் தலை நீண்டு குவிந்ததாக இருக்கும்.

மகளிரின் வாயிதழ்களை இந்திரகோபம் என்று கருதி மயில்கள் அப்பூச்சிகளைக் கவர்ந் திழுத்தன என்று கம்பன் ஒரு பாடலில் (1 - 14 - 9) கூறியுள்ளான். மகளிரின் மூக்கு அவ்வாறு இருக்க வேண்டும் என்று மூக்கிற்குக் கம்பன் இலக்கணம் கூறினான்.

## தம்பலப் பூச்சி

தம்பலம், என்ற பெயர் முதலில் கலித் தொகையில்தான் வருகின்றது. மூக்கும் முழியு மாக இருக்கிறாள் என்று கூறும் வழக்கையும் கவனிக்க வேண்டும். இன்றுசிவந்த வாயிதழ் களுக்கு வெற்றிலைப் பாக்கைப் பயன்படுத் துவது தான் மரபு.

"எள்ளிட விடனு மின்றி
யெழுந்தன விலங்கு கோபப்
புள்ளுறத் தலைவர் தம்மைப்
பிரிந்தவர் தழுவத் தூமக்
கள்ளுடை யோதி யார்தங்
கலவியிற் பலகாற் கான்ற
வெள்ளடைத் தம்பற் குப்பை
சிதர்ந்தென விரிந்த மாதே"

4 9 29

கார்காலத்தில் எள்ளையிடுவதற்கும் இடமில் லாமல் இந்திரகோபமென்னும் பட்டுப்பூச்சிகள் எழுந்தன என்று கம்பன் கூறியுள்ளான். இந்திரகோபப்பூச்சிகள் கார் காலத்தில் திடீ ரென்று தோன்றுவது இயற்கை என்பதை முன்பே அறிந்தோம்.

கம்பனுந் தமிழ் மரபை ஒட்டி இந்திரக் கோபத்தைப் பற்றிப் பாடியுள்ளான்:

"நன்னெடுங் காந்தட் போதி
னறைவிரி கடுக்கை மென்பூத்
துன்னிய கோபத் தோடுந்
தோன்றிய தோற்றந் தும்பி

யின்னிடை முரல்வ நோக்கி
யிருநில மகள்கை யேந்திப்
பொன்னொடுங் காசை நீட்டிக்
கொடுப்பதே போன்ற தம்மா''

4 9 3

செங்காந்தள் மலரில் கொன்றைமலர் தம்பலப் பூச்சிகளுடன் பொருந்தித் தோன்றியது நிலமகள் கையில் பொன்னையும், மாணிக்கத்தையும் காட்டுவதுபோல் இருந்ததாம்.

கம்பன் பல பாடல்களில் இந்திரகோபப் பூச்சியைக் கூறியுள்ளதால், கம்பன் இந்தப் பூச்சியின் அழகைப் போற்றிய தன்மை தெரிகின்றது.

''பூண்டவை எறியா வாளு மெற்று மழுவுஞ்
செறியக்கட்டி யிரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகா நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற் றவிர்பூண்''

என்று வரும் கலித்தொகை (பாடல் 85) வரிகளில், தலைவி தன் மகன் பூண்ட அணி கலன்களைக் கூறுங்கால் 'வெட்டாத வாளும், வெட்டாத மழுவும் நெருங்கிக் கட்டி, இரண்டு புறத்திலும் தங்கின மழை பெய்த புலத்து, மூதாயினது புகரையுடைத்தாகிய நிறத்தையுடைய பவளத்தான் செய்த அழுக்கற விளங்கிய இடபத்தையுடைய விளங்குகின்ற பூண்' என்று கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

மூதாயை அறிவியலில் Mutillus Muttilius என்று அழைப்பர். இது Muttilidal என்ற குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

●

## கருவி நூல்கள்

1 அகநானூறு - இரண்டு பதிப்புகள்

- இராஜகோபாலய்யர் பழைய பதிப்பு

புதிய கழகப் பதிப்பு

2 குறுந்தொகை

- உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு

3 நற்றிணை

- பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் பதிப்பு

ஔவை துரைசாமிப் பிள்ளை பதிப்பு

4 கலித்தொகை

- அனந்தராமய்யர் பதிப்பு

5 சங்கநூல்களில் விலங்கின விளக்கம்

- பி. எல். சாமி, கழக வெளியீடு

(இரலை மானின் விளக்கம்)

6 சங்க நூல்களில் மணிகள்

- பி. எல். சாமி, சேகர் பதிப்பக வெளியீடு

7 திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம்

- புருடோத்தம நாயுடு

சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு

8 **Tamil Lexicon, Volume II, Part 1.**

9 General and Applied Entomology
- N. A. Little

10 Insects
- M. S Mani, National Book Trust

11 Common Insects of India
- N. P. Kalyanam
Asia publishing House

12 Manuel of Indian Forest Botany
- N. L. BOR, O.U.P.

13 Animals of India
- H. S Prater
Bombay Natural History Society

[பக். 41-இல் விடுபட்டது.

நீலமணி பகுதிக்கு முற்பட்டது.]

காயா போன்ற மணியையும் பவழத்தையும் இணைத்து அணிகலமாகக் கூறிய உவமை அகநானூற்றில் இரண்டாம் தொகுதியான 'மணிமிடை பவளம்' என்ற தொகுதியில் இல்லையென்பதைக் காணும்போது அகநானூறு தொகுக்கப்பட்டதில் பாடல்கள் மாறினவா என்ற ஐயம் ஏற்படுகின்றது.

மணிமிடை பவளம் என்ற தொகுதியில் அதன் தொடர்பான பாடல்கள்தாம் இருந் திருக்க வேணடும். அவை இல்லையே. மணி மிடை பவளத்தைப்பற்றிக் குறிப்பிடும் பாக்களில் ஒன்று களிற்றியானை நிரையிலும் மற்ற இரண்டு பாடல்கள் நித்திலக் கோவையிலும் இருப் பதைக் காணும்போது அகநானூற்றுப் பாடல் களை முதலில் தொகுத்தபோது மணிமிடை பவளம் என்ற தொகுதியில் இப் பாட்டுக்கள் இருந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். பின்னால் மாற்றப்பட்டிருக்கலாம்.

தொகுத்தபோது சூட்டிய பெயர்கள் மிக அருமையானவை. களிற்றியானை நிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை என்ற பெயர்கள் பொருத்தமான பெயர்களாகும். களிற்றியானை நிறை என்ற பெயரை விலங்கியல் அறிவோடு ஆராய்ந்தால் ஓர் அறிவியல் உண்மை புலப்படுகின்றது.

ஆண்யானைகள் பெண் யானைகளைக் கூடும் காலத்தில்தான் பெண்யானைகளுடன் நெருங்கிப் பழகும். ^ ஆனால், குட்டிகள் பிறந்த பிறகு சிறிதுகாலம் கழித்து, தங்கள் துணைவி களைத் துறந்துவிட்டு ஆண்யானைகள் பலவும் ஒன்று சேர்ந்து தனிக் கூட்டமாகக் காட்டில் வாழும். இதை நான் எழுதிய நூலான விலங்கின விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

இந்தப் பெருமித நடை மிக்க (ஆண்) களிற்றியானைகள் வரிசையாகப் போவதைப் பார்த்துப் பிற்காலப் புலவன் ஒருவன் நுண்ணுணர்ச்சியால் பட்டறிவோடு 'களிற்றியானை நிரை' என்ற பெயரைச் சூட்டினான். இத் தலைப்பில் சில பாடல்களைத் தொகுத்தான்.

அதேபோல 'மணிமிடைபவளம்' என்ற அழகிய பாட்டு வரியைப் படித்த பிற்காலப் புலவன் அந்த வழக்கை ஒட்டியே இரண்டாம் தொகுதிக்குப் பெயரிட்டான்.


கல்வெட்டுக்களில்
கட்டுரைகள்
முத்தரையர்


மணிகள்
தமிழ்ப் பண்பாடு
பிளல்.சாமி
அறிவியல்
மீனகள்
கட்டுரைகள்

இரலை மான்



Wrapper Printed At
Om Printing Agencies Madras-24